# 04 ஆகஸ்ட் 2023 தினசரி நடப்பு நிகழ்வுகள்

## செய்திகளில் இடம் பெற்ற நபர்கள்

### தீரன் சின்னமலை 218வது நினைவு தினம்



- ❖ தீரன் சின்னமலை அவர்கள், தென்னிந்தியாவில் உள்ள தமிழ்நாட்டில் இருக்கும் ஈரோடு மாவட்டத்தில் உள்ள காங்கயம் அருகிலுள்ள மேலப்பாளையம் என்னும் ஊரில் ஏப்ரல் மாதம் 17 ஆம் தேதி, 1756 ஆம் ஆண்டில் பிறந்தார். அவருக்குப் பெற்றோரிட்ட பெயர் "தீர்த்தகிரி".
- ❖ மூன்று மைசூர் போர்களிலும், திப்புசுல்தானுடன், தீரன் சின்னமலை கூட்டணி அமைத்து ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டார்.
- ❖ கி.பி 1799ல் தனது படைகளைப் பெருக்கும் விதமாக, திப்புவிடம் பணிபுரிந்த முக்கியமான சிறந்த போர்வீரர்களான "தூண்டாஜிவாக், அப்பாச்சி" போன்றோரை தனது படையில் சேர்த்துக்கொண்டார்.
- ❖ "லெஃப்டினன்ட் கர்னல் கே. க்ஸிஸ்டரின்" கம்பெனியின் 5 ஆம் பட்டாளத்தை அழிக்க எண்ணிய அவர், ஜூன் மாதம் 3 ஆம் தேதி, 1800 ஆம் ஆண்டில், கோவைக்கோட்டையைத் தகர்க்கத் திட்டமிட்டார். சரியான தகவல் பரிமாற்றங்கள் இல்லாத ஒரே காரணத்தால், கோவைப்புரட்சி தோல்வியுற்றது.
- ❖ 1801ல், பிரெஞ்சுக்காரரான "கர்னல் மாக்ஸ் வெல்" தலைமையில் ஆங்கிலேயர்களை பவானி–காவிரிக்கரையில் எதிர்த்த அவர், வெற்றிக் கண்டார்.
- ❖ 1802ல் சென்னிமலைக்கும் சிவன் மலைக்குமிடையே நடந்த போரில் சிலம்பமாடி ஆங்கிலப்படையைத் தவிடுபொடியாக்கி, 1803ல் அறச்சலூரில் உள்ள "கர்னல் ஹாரிஸின்" ஆங்கிலப்படையை கையெறிகுண்டுகள் வீசி வெற்றிக் கண்டார்.
- ❖ பின் தீரன் சின்னமலை, கைது செய்யப்பட்டு, "சங்ககிரிக் கோட்டைக்குக்" கொண்டு செல்லப்பட்டு ஆங்கிலேயர்களால், ஜூலை 31, 1805 அன்று தூக்கிலிட்டனர்.

### இந்திய ராணுவத்தில் "தமிழக முதல் பெண் மேஜர் ஜெனரல்"



- ❖ இந்திய ராணுவ செவிலியர் சேவையில், தமிழகத்தில் இருந்து முதல் பெண் மேஜர் ஜெனரலாக "இக்னேசியஸ் டெலோஸ் புளோரா" பதவி உயர்வு பெற்றுள்ளார்.
- ❖ பதவி உயர்வு பெற்றுள்ள இக்னேசி யஸ்டெலோஸ் புளோராவின் சொந்த ஊர்," கன்னியாகுமரி மாவட்டம் ராஜாவூர் வடக்கூர்" ஆகும். இவர் கடந்த 5–1–1965–ம் ஆண்டு பிறந்தார்.

SHANMUGAM IAS ACADEMY

- இவர் "செவிலியர் பிரிவில் முதன்மை இடமான", மேஜர் ஜெனரல் என்ற உயர்பதவியைப் பெற்றுள்ளார்.

## மராத்தி கவிஞர் "நாம்தேயோ தோண்டோ மகானோர்"



- பிரபல மராத்தி கவிஞரும் பாடலாசிரியருமான நம்தேயோ தோண்டோ மஹானோர் காலமானார் அவருக்கு வயது 81.
- மஹானோர் மராத்தி திரைப்படங்களுக்கான "கவிதைகள் மற்றும் பாடல் வரிகளுக்கு" மிகவும் பிரபலமானவர்.
- 1942 ல் பிறந்த நாம்தேவ் தோண்டோ மஹானோருக்கு 1991ல் "பத்ம ஶ்ரீ" விருது வழங்கப்பட்டது. அவர் மாநில சட்ட மேலவை உறுப்பினராகவும் இருந்துள்ளார்.
- 'ஜகல பிரேம் அர்பவே', 'கங்கா வஹு தே நிர்மல்' மற்றும் 'திவேலகனிச்சி வேல்' உள்ளிட்ட பல பிரபலமான கவிதைகள் மற்றும் பாடல்களை மஹானோர் எழுதியுள்ளார், மேலும் 'ஏக் ஹோதா விதுஷாக்', 'ஜெய்த் ரே ஜைத்', 'சர்ஜா' போன்ற மராத்தி திரைப்படங்களுக்கும் பாடல்களை எழுதியுள்ளார்.

# செய்திகளில் இடம் பெற்ற இடங்கள்

## இந்தியாவில் முதல் முறையாக சைட் மியூசியம் : ஆதிச்சநல்லூரில் ஆகஸ்ட் 5–ல் பணிகளை தொடங்கி வைக்கிறார் நிர்மலா சீதாராமன்



- ஆதிச்சநல்லூர் பரம்பு பகுதியில் கடந்த 2021ம் ஆண்டு அகழாய்வு பணிகள் தொடங்கியது, அகழாய்வு பணியில் கண்டுபிடிக்கப்பட்ட முதுமக்கள் தாழிகளை ஆவணப்படுத்தும் பணிகள் நடந்து வருகிறது.
- தற்போது ஆதிச்சநல்லூரில் இருந்து ஶ்ரீவைகுண்டம் செல்லும் வழியில், அருங்காட்சியகம் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- "சைட் மியூசியம்" என்பது இந்தியாவில் முதல் முறையாக ஆதிச்சநல்லூரில் அமைய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக தற்போது 'பி' சைட்டில் கண்ணாடி மூலம் உள்ளது உள்ளபடியே "தோண்டப்பட்ட குழிகள் மூடாமல் அதன் மீது கண்ணாடி பேழைகள் அமைத்து" அதன் வழியாக பொருள்களை பயணிகள் பார்க்கும் வண்ணம் காட்சி படுத்தப்பட்டுள்ளது.
- மேலும் உள்ளே விளக்குகள் பொறுத்தப்பட்டு பார்க்கும் பார்வையாளர்களுக்கு "முதுமக்கள் தாழிகள், அதனுள் கிடைத்த பொருள்கள்" தெரியும் வண்ணம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

SHANMUGAM IAS ACADEMY

- கடந்த "1876ல் இந்தியாவில் முதல் முதலில் அகழாய்வு நடந்த ஆதிச்சநல்லூரில்" சுமார் 147 வருடங்களுக்கு பிறகு இந்தியாவிலே முதல் முதலில் சைட் மியூசியம் அமைவது மிகவும் விசேஷமாக கருதப்படுகிறது.

## விளையாட்டு

### சஞ்சனாவுக்கு வெள்ளி, கபில் சோனோவாலுக்கு வெண்கலம்




- "ஆசிய யூத் மற்றும் ஜூனியர் பளு தூக்கும் சாம்பியன்ஷிப்" போட்டியில் இந்தியாவின் "சஞ்சனா வெள்ளியும், கபில் சோனோவால் வெண்கலப் பதக்கம்" வென்றனர்.
- யூத் பிரிவில் இந்தியாவின் கபில் சோனோவால் 102 கிலோ எடைபிரிவில் மொத்தம் 276 கிலோ (125+151கிலோ) தூக்கி வெண்கலப் பதக்கம் வென்றார்.
- ஏற்கெனவே "ஸ்நாட்ச் பிரிவில்125 கிலோ எடைபிரிவிலும் வெண்கலம் வென்றிருந்தார் "சோனோவால்".
- மேலும் மகளிர் பிரிவில் 81 கிலோ பிரிவில் "அஞ்சனா ஸ்ரீஜித்" வெண்கலம் வென்றார். 76 கிலோ பிரிவில் "சஞ்சனா" வெள்ளி வென்றார்.
- முதன்முறையாக "ஆசிய யூத் மற்றும் ஜூனியர் பளு தூக்கும் சாம்பியன் ஷிப்பை இந்தியா நடத்துவது குறிப்பிடத்தக்கது.

## புத்தகங்களும் ஆசிரியர்களும்

### 'I kick and I fly' – ருச்சிரா குப்தா

சுரண்டலில் இருந்து பெண்களை விடுவிக்கும் நோக்கத்திற்காக அர்ப்பணிக்கப்பட்ட புத்தகம்.

## உச்சி மாநாடுகள்

### பிரிக்ஸ் நாடுகளின் உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி 2023 ஆகஸ்ட் 22–24–ம் தேதிகளில் ஜோகன்னஸ்பர்க்கிற்கு பயணம் மேற்கொள்கிறார்.

- பிரிக்ஸ் என்பது **பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா** ஆகியவற்றின் சுருக்கமாகும்.
- பிரிக்ஸ் அமைப்பின் தற்போதைய ஐந்து உறுப்பு நாடுகளான பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகியவை ஆகஸ்ட் 22 மற்றும் 24 ஆகிய தேதிகளில் அங்கு கூடுகின்றன.
- இந்த உறுப்பினர்கள் பொருளாதார வளர்ச்சியின் முக்கிய தீர்மானிப்பாளர்கள் மற்றும் பிராந்திய விவகாரங்களில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர்.

SHANMUGAM IAS ACADEMY

❖ பிரிக்ஸ் அமைப்பின் முக்கிய கவனம் அமைதி, பாதுகாப்பு, அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்பு தொடர்பான விஷயங்களில் உள்ளது.
❖ பிரிக்ஸ் உச்சி மாநாடு 2009 இல் தொடங்கியது, ஆண்டு கூட்டங்கள் இன்றும் முறையான உச்சி மாநாடுகளாக நடத்தப்படுகின்றன.

# புவியியல்

## இந்திய வானிலை ஆய்வு மையம் டெல்லிக்கு மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

❖ மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் மகாராஷ்டிராவின் விதர்பாவில் பலத்த மழை பெய்யும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. டெல்லிக்கு மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
❖ பச்சை – எந்த ஆலோசனையும் இல்லை: பச்சை எச்சரிக்கை என்பது ஒரு வானிலை நிகழ்வு இருக்கலாம் என்றாலும், அது எந்தவிதமான ஆலோசனையும் வழங்கத் தேவையில்லை.
❖ மஞ்சள் நிறம் – எச்சரிக்கையாக இருங்கள்: மஞ்சள் நிற எச்சரிக்கை என்பது மோசமான வானிலை நிலைமைகளை குறிக்கிறது, மேலும் நிலைமைகள் மோசமடையக்கூடும், இது அன்றாட வாழ்க்கைக்கு இடையூறுகளை ஏற்படுத்தும் என்பதாகும்.
❖ ஆரஞ்சு – தயாராக இருங்கள்: போக்குவரத்து, ரயில், சாலை மற்றும் விமானப் போக்குவரத்தில் இடையூறு ஏற்படக்கூடிய மிகவும் மோசமான வானிலை எதிர்பார்க்கப்படும் போது ஆரஞ்சு எச்சரிக்கை வெளியிடப்படுகிறது. மின்சார விநியோகத்தில் இடையூறு ஏற்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.
❖ சிவப்பு – நடவடிக்கை எடுங்கள்: மிக மோசமான வானிலை போக்குவரத்து மற்றும் மின்சார விநியோகத்தை சீர்குலைக்கும் என்று எதிர்பார்க்கப்படும் போது சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்படும். இது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும்.

**இந்திய வானிலை ஆய்வு மையம்**
❖ 1875 ஆம் ஆண்டில், இந்திய அரசு இந்திய வானிலை ஆய்வுத் துறையை நிறுவியது.
❖ இது புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் வருகிறது.
❖ இது நாட்டில் உள்ள அனைத்து வானிலை ஆய்வுகளையும் ஒரு மத்திய அதிகாரத்தின் கீழ் கொண்டு வருகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## வெளிநாட்டு மாணவர்களுக்கான 'இந்தியாவில் கல்வி' இணையதளம்: மத்திய அரசின் அறிமுகம்



- இந்தியாவில் உயர்கல்வி பயில வரும் வெளிநாட்டு மாணவர்களின் பயணம் மற்றும் நடைமுறைகளை எளிதாக்கும் வகையில் 'எஜுகேஷன் இன் இந்தியா (எஸ்ஐஐ)' என்ற புதிய இணையதளத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- "இந்தியாவை சர்வதேச கல்வி மையமாக மாற்றும் நோக்கத்துடன் இந்த இணையதளம் தொடங்கப்பட்டுள்ளது, மேலும் பல்வேறு பின்னணியில் உள்ள மாணவர்களை இந்தியாவில் உயர்கல்வி பெற வரவேற்கிறது.
- உலக அளவில் உயர்கல்விக்கான சிறந்த மையமாக இந்தியாவை அடையாளம் காணவும் இது உதவும்.
- வெளிநாட்டு மாணவர்கள் இந்த இணையதளத்தின் மூலம் இந்தியாவில் "உயர் கல்விக்கான விண்ணப்பப் பதிவு" மற்றும் "நுழைவு (விசா) அனுமதிப் பதிவு" ஆகியவற்றை எளிதாகச் செய்யலாம்.

## இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் (NHAI) ராஜ்மார்க்யாத்ரா என்ற புதிய செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.




- நாட்டின் தேசிய நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் வாகன ஓட்டிகளுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதே இதன் நோக்கம்.
- இந்த செயலி மூலம், வாகன ஓட்டிகள் சாலைகள் பற்றிய தகவல்களைப் பெறலாம் மற்றும் தேசிய நெடுஞ்சாலைத் துறை தொடர்பான பிரச்சினைகள் குறித்து புகார் அளிக்கலாம்.
- ஆண்ட்ராய்டு பயனர்கள் இந்த பயன்பாட்டை கூகிள் பிளே ஸ்டோரிலிருந்தும், ஐஓஎஸ் பயனர்கள் ஆப்பிள் ஆப் ஸ்டோரிலிருந்தும் பதிவிறக்கம் செய்யலாம். இந்தி மற்றும் ஆங்கிலத்தில் கிடைக்கிறது.

SHANMUGAM IAS ACADEMY

# வங்கி & நிதி

## இந்திய ரிசர்வ் வங்கி




- "ராஜதானி கோ–ஆப் அர்பன் வங்கியுடன்" நவநிர்மான் கோ–ஆப் அர்பன் வங்கியை இணைக்க ரிசர்வ் வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.
- "வங்கி ஒழுங்குமுறைச் சட்டம், 1949" இன் பிரிவு 56 உடன் பிரிவு 44A இன் துணைப்பிரிவு (4) இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்துவதில் இந்தத் திட்டம் அனுமதிக்கப்பட்டுள்ளது.
- வங்கி ஒழுங்குமுறைச் சட்டம், 1949 இந்திய வங்கிகளை ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு கட்டமைப்பை வழங்கும் சட்டம்.

**இந்திய ரிசர்வ் வங்கி** (RBI)

- கவர்னர் – சக்திகாந்த தாஸ்
- துணை ஆளுநர்கள் – ஜே.சுவாமிநாதன், டி.ரபி சங்கர், எம்.ராஜேஷ்வர் ராவ், டாக்டர் எம்.டி.பத்ரா
- தலைமையகம் – மும்பை, மகாராஷ்டிரா
- நிறுவப்பட்ட ஆண்டு – 1 ஏப்ரல் 1935

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

## 7–வது ஆசிய சாம்பியன்ஸ் டிராபி ஹாக்கி போட்டி

- 7–வது ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பி யன்ஸ் டிராபி சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் மைதானத்தில் நேற்று தொடங்கியது.
- ஆசிய சாம்பியன்ஸ் டிராபி ஹாக்கி போட்டி 2011ல் தொடங்கப்பட்டது.
- இந்த ஆண்டுக்கான ஆகஸ்ட் 3–ம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 13–ம் தேதி வரை நடைபெற உள்ளது.
- இப்போட்டியில் 6 அணிகள் பங்கேற்கின்றன.
- இந்த போட்டி இந்தியாவில் நடைபெறுவது இதுவே முதல் முறையாகும்.
- மேலும் 15 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழகத்திதில் சர்வதேச ஹாக்கி போட்டி நடைபெறுகிறது.

SHANMUGAM IAS ACADEMY

## சுகாதாரம் மற்றும் குடும்ப விவகாரங்கள் அமைச்சகத்தின் கீழ் தேசிய திசு மற்றும் உறுப்பு மாற்று அமைப்பு (NOTO) 13வது தேசிய உறுப்பு தான தினத்தை டெல்லியில் நடத்தியது.




உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், இந்தத் துறையில் பணிபுரியும் நிபுணர்களை அங்கீகரிப்பதற்கும் இது கொண்டாடப்படுகிறது.

**தமிழ்நாடு ஆறாவது முறையாக முதல் இடத்தை பிடித்துள்ளது.**

- ❖ 2013 ஆம் ஆண்டில் சுமார் 5000 பேர் தங்கள் உறுப்புகளை தானம் செய்ய முன்வந்ததாக மத்திய அமைச்சர் சுட்டிக்காட்டினார். தற்போது ஆண்டுதோறும் 15,000க்கும் மேற்பட்டோர் உறுப்பு தானம் செய்யப்பட்டுள்ளனர்
- ❖ தமிழகத்தில் 2008-ம் ஆண்டு முதல் இதுவரை 1705 உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்டுள்ளன.

## ரூ. 8.29 கோடி செலவில் புதிய இந்தியா எழுத்தறிவு திட்டம் இந்த ஆண்டு அமல்படுத்தப்படும்.

**புதிய இந்தியா எழுத்தறிவுத் திட்டம்** :




- ❖ புதிய இந்தியா எழுத்தறிவுத் திட்டம் என்பது 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினருக்கு எழுத்தறிவு வழங்கும் நோக்கம் கொண்டது.
- ❖ இந்தத் திட்டம் 2022-23 நிதியாண்டு முதல் 2026-27 நிதியாண்டு வரை ஐந்து ஆண்டுகளுக்கு அமல்படுத்தப்படும்.
- ❖ இந்த திட்டம் ஐந்து முக்கிய கூறுகளைக் கொண்டுள்ளது, அவை பின்வருமாறு:

    1 .அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண் அறிவு,

    2. நுண் வாழ்க்கை திறன்

    3.தொழில் திறன் மேம்பாடு,

    4.அடிப்படைக் கல்வி, மற்றும்

    5.தொடர் கல்வி.

- ❖ இந்தத் திட்டத்தின் கீழ் பயனாளிகள் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் உள்ள கணக்கெடுப்பாளர்களால் மொபைல் செயலியில் வீட்டுக்கு வீடு சென்று ஆய்வு செய்வதன் மூலம் அடையாளம் காணப்படுகிறார்கள்.

SHANMUGAM IAS ACADEMY

- மொபைல் பயன்பாட்டின் மூலம் எந்த இடத்திலிருந்தும் நேரடி பதிவு மூலம் கல்வியறிவற்றவர்களும் இத்திட்டத்தின் பலன்களைப் பெறலாம்.
- இத்திட்டம் முக்கியமாக கற்பித்தல் மற்றும் கற்றலுக்கான தன்னார்வத் தொண்டு அடிப்படையிலானது.
- இந்த நோக்கத்திற்காக ஒரு மொபைல் செயலி மூலம் தன்னார்வலர்கள் பதிவு செய்யலாம்.

## தமிழகத்தைச் சேர்ந்த டி.குகேஷ் இந்தியாவின் நம்பர் 1 செஸ் வீரர் ஆனார்.



- சர்வதேச செஸ் சம்மேளனத்தின் லைவ் ரேட்டிங்கில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்தை பின்னுக்குத் தள்ளி இந்த சாதனையை அவர் நிகழ்த்தியுள்ளார்.
- 17 வயதான குகேஷ் சென்னையை சேர்ந்தவர். இந்திய கிராண்ட் மாஸ்டர்களில் ஒருவர். கடந்த 2019-ல் இந்த கிராண்ட் மாஸ்டர் பட்டத்தை அவர் பெற்றார். 16 வயதில் உலக சாம்பியனை வீழ்த்தி சாதனை படைத்தார். மிக இளம் வயதில் 2750 லைவ் ரேட்டிங்கை எட்டிய வீரர் என்ற சாதனையை அண்மையில் படைத்தார்.
- உலக தரவரிசை பட்டியலில் 2755.9 ரேட்டிங் உடன் தற்போது 9-வது இடத்தில் உள்ளார். இது லைவ் ரேட்டிங் ஆகும். விஸ்வநாதன் ஆனந்த் 2754.0 ரேட்டிங் உடன் உள்ளார். குகேஷுக்கு விஸ்வநாதன் ஆனந்த் தான் ரோல் மாடல் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்நாடு திறந்தநிலை பல்கலை.க்கு 'ஏ பிளஸ்' அந்தஸ்து




- தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக் கழகத்துக்கு 'ஏபிளஸ்' அந்தஸ்தை தேசிய தர மதிப்பீடு மற்றும் அங்கீ காரக் குழுவால் (நாக் கமிட்டி) வழங்கியுள்ளது.
- திறந்தநிலை பல்கலைக்கழகம் 2002-ம் ஆண்டு தமிழக அரசால் நிறுவப்பட்டது. இது பல்கலைக் கழக மானியக் குழுவின் (யுஜிசி) 2எப், 12பி தகுதி பெற்றுள்ளது. தற்போது தொலைநிலைக் கல்வி முறையில் படிப்புகளை வழங்கும் கல்வி நிறுவனங்களில் தமிழ்நாடு திறந்தநிலை பல்கலை.க்கு நாக் கமிட்டி 4-க்கு 3.32 புள்ளிகளை
- வழங்கியுள்ளது.
- இதன்மூலம் 'ஏ பிளஸ்' தகுதியை பெற்று சாதனை படைக்கப்பட்டுள்ளது. கற்றல், கற்பித்தல், மதிப்பீடு, ஆராய்ச்சி, உள்கட்டமைப்புகள், கற்றல் வளம், மேலாண்மை, தலை மைத்துவம்உள்ளிட்ட அளவுகோல்களை மையமாக கொண்டு இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

SHANMUGAM IAS ACADEMY

# மாநில நடப்பு விவகாரங்கள்

## கேரளாவில் மலபார் நதி திருவிழா




- கேரளாவில், மலபார் நதி திருவிழாவின் ஒன்பதாவது பதிப்பு கோழிக்கோடு துஷாரகிரியில் திறக்கப்பட்டது.
- கேரள சாகச சுற்றுலா ஊக்குவிப்பு சங்கம் மற்றும் கோழிக்கோடு மாவட்ட சுற்றுலா மேம்பாட்டு கவுன்சில் ஏற்பாடு செய்துள்ள மூன்று நாள் நிகழ்ச்சி, துஷாரகிரியில் உள்ள "இருவாஞ்சிபுழா மற்றும் சாலிபுழா நதிகளில்" நடைபெறும்.
- இந்திய கயாகர்ஸ் தவிர, அமெரிக்கா, இங்கிலாந்து, இஸ்ரேல், கஜகஸ்தான் மற்றும் தென்னாப்பிரிக்கா உள்ளிட்ட பத்து நாடுகளைச் சேர்ந்த துடுப்பெடுத்தாடுபவர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்கின்றனர்.
- இந்த ஆண்டு மலபார் நதி திருவிழாவின் ஒரு பகுதியாக "தேசிய ஒயிட்வாட்டர் கயாக்கிங் சாம்பியன்ஷிப்" நடத்தப்படும்.

# தேசிய நடப்பு நிகழ்வுகள்

## சமீபத்தில், பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சர், MASI போர்டல் பற்றி ராஜ்யசபாவில் அறிவிப்பு வெளியிட்டார்.

- நாடு முழுவதும் உள்ள குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் மற்றும் அவற்றின் ஆய்வு வழிமுறைகளை ஒரே நேரத்தில் கண்காணிப்பதற்காக தடையற்ற ஆய்வுக்கான கண்காணிப்பு செயலி (MASI) உருவாக்கப்பட்டது.
- தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (NCPCR) இந்த செயலியைஉருவாக்கியுள்ளது.
- சிறுவர் நீதிச் சட்டம், 2015 (திருத்தப்பட்ட 2021) –ன் கீழ் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களை ஆய்வு செய்வதற்கான வழிமுறைகளை திறம்பட செயல்படுத்துவதற்காக இந்த செயலி கண்காணிப்பு இணையதளத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அங்கு தானியங்கி அறிக்கைகள் உருவாக்கப்படுகின்றன.

**தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்**

- நிறுவப்பட்டது – 2005
- சட்டப்பூர்வ அமைப்பு
- பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.
- சி.பி.சி.ஆர் சட்டம், 2005 இன் பிரிவு 13 இன் கீழ் "அனைத்து சட்டங்கள், கொள்கைகள், திட்டங்கள் மற்றும் நிர்வாக வழிமுறைகள் இந்திய அரசியலமைப்பு மற்றும் குழந்தைகளின் உரிமைகள் குறித்த ஐ.நா உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ளபடி

SHANMUGAM IAS ACADEMY

குழந்தை உரிமைகள் கண்ணோட்டத்துடன் இணக்கமாக இருப்பதை உறுதி செய்ய ஆணையம் கட்டாயப்படுத்தப்படுகிறது."

## "உத்கர்ஷ்" மற்றும் "உன்மேஷ்" திருவிழா



- ❖ 3 ஆகஸ்ட் 2023 அன்று ஜனாதிபதி திரௌபதி முர்மு இரண்டு திருவிழாக்களை தொடங்கி வைத்தார் – இந்தியாவின் நாட்டுப்புற மற்றும் பழங்குடி வெளிப்பாடுகள் திருவிழாவான "உத்கர்ஷ்" மற்றும் போபாலில் சர்வதேச இலக்கிய விழாவான "உன்மேஷ்".
- ❖ மத்திய கலாச்சார அமைச்சகத்தின் சங்கீத நாடக அகாடமி மற்றும் சாகித்ய அகாடமியுடன் இணைந்து மத்திய பிரதேசத்தின் கலாச்சாரத் துறை இந்த நிகழ்வை ஏற்பாடு செய்கிறது.
- ❖ ஆக., 3 முதல், 5 வரை திருவிழா நடக்கிறது.
- ❖ சமகால இலக்கியப் படைப்புகள் மற்றும் வாசகர்கள் மீதான அவற்றின் தாக்கம் குறித்து கவனம் செலுத்தும் "அம்ரித் கால் மே உன்மேஷ்" நிகழ்ச்சித் திட்டம் குறித்து ஜனாதிபதி எடுத்துரைத்தார்.
- ❖ "உத்கர்ஷ்" என்ற சொல்லுக்கு முன்னேற்றம் என்று பொருள், மேலும் பழங்குடி சமூகங்களின் முன்னேற்றம் நாட்டின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கு பங்களிக்கும் என்று குடியரசுத் தலைவர் வலியுறுத்தினார்.

## தேசிய தலைநகர் டெல்லி (திருத்த) மசோதா 2023

- ❖ தேசிய தலைநகர் டெல்லி (திருத்த) மசோதா 2023 அல்லது சேவை மசோதா, அவசர சட்டத்திற்கு பதிலாக, நாட்டின் தலைநகரில் அதிகாரத்துவத்தின் மீது மையத்தின் மத்திய அரசு கட்டுப்பாட்டை மீட்டெடுக்க வழிவகை செய்கிறது.
- ❖ புது தில்லி நாட்டின் தலைநகரம் மற்றும் யூனியன் பிரதேசம் (UT) ஆகும். தில்லியில் அதிகாரிகளை மாற்றுவது, பணியமர்த்துவது மற்றும் கட்டுப்படுத்துவது தொடர்பாக டெல்லி துணை நிலை ஆளுநருக்கு(எல்ஜி) அதிகாரம் வழங்க இந்த மசோதா முயல்கிறது.

## அமைச்சரவை செயலாளர் திரு. ராஜீவ் கௌபாவின் பதவிக் காலம் மூன்றாவது முறையாக நீட்டிக்கப்பட்டுள்ளது.



- ❖ **அகில இந்திய சேவைகள் (இறப்பு மற்றும் ஓய்வுகால பலன் விதிகள்), 1958** மற்றும் அடிப்படை விதிகளின் **விதி 56 (டி)** ஆகியவற்றை தளர்த்தி அமைச்சரவை செயலாளராக இருந்த ராஜீவ் கௌபாவின் சேவையை மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டித்து அமைச்சரவையின் நியமனக் குழு (ஏ.சி.சி) ஒப்புதல் அளித்தது.
- ❖ இந்த நீட்டிப்பு மூலம், ராஜீவ் கௌபா மிக நீண்ட காலம் பதவியில் இருந்த அமைச்சரவை செயலாளராக மாறியுள்ளார்.

SHANMUGAM IAS ACADEMY



SHANMUGAM IAS ACADEMY
YOUR DREAM....! OUR RESPONSE.....!
தமிழ்நாடு அளவிலான இலவச தேர்வு
TNPSC GROUP I ,II ,IV
மனதின் குரல் தேர்வு & அம்ரித் மஹோத்சவ் தேர்வு
மனதின் குரல் தேர்வு ஒவ்வொரு மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை
அம்ரித் மஹோத்சவ் தேர்வு ஒவ்வொரு மாதத்தின் இரண்டாம் சனிக்கிழமை
STARTS ON – 12 AUGUST 2023
ONLINE & OFFLINE TEST
FOR REGISTRATION Scan QR code
9994146662,9994427714
9500785666
@ShanmugamIASAcademy
@ShanmugamIASAcademy
Shanmugamiasacademy
Shanmugamiasacademy
COIMBATORE
550/3, DR NANJAPPA ROAD, OPPOSITE TOWN BUS STAND, COIMBATORE GANDHIPURAM, 641009
TIRUNELVELI
25, SUNDARI COMPLEX, NANGUNERI ROAD, NEAR NEW BUS STAND, TIRUNELVELI, 627005


SHANMUGAM IAS ACADEMY
YOUR DREAM….! OUR RESPONSE…..!
TAMILNADU LEVEL FREE TEST
TNPSC GROUP I ,II ,IV
MANN KI BAAT – TEST & AMRIT MAHOTSAV TEST
MANN KI BAAT TEST ON EVERY 4TH SUNDAY
AMRIT MAHOTSAV TEST ON EVERY 2ND SATURDAY
STARTS ON – 12 AUGUST 2023
ONLINE & OFFLINE TEST
9994146662,9994427714
@ShanmugamIASAcademy
@ShanmugamIASAcademy
Shanmugamiasacademy
Shanmugamiasacademy
COIMBATORE
550/3, DR NANJAPPA ROAD,
OPPOSITE TOWN BUS STAND,
COIMBATORE GANDHIPURAM, 641009
TIRUNELVELI
25, SUNDARI COMPLEX, NANGUNERI ROAD,
NEAR NEW BUS STAND, TIRUNELVELI, 627005